## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 277/2014 | Date : 06.06.2023 | PW1 |
|---|---|---|
| Name: மதியழகன் | த/பெ.அபிமன்னன் | |
| Evidence Recorded Time: 1.18 P.M. to 1.45 P.M | | |

**3 முதல் 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

தாவா சொத்து விற்பனை குறித்து எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் அக்கம்பக்கம் உள்ளவர்கள் சொல்லி தெரிந்து கொண்டேன். யார் என்னிடம் தகவல் சொன்னார்கள் என்று குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் கூறமுடியாது. நான் எப்போது, எங்கே சேட்டை பார்த்தேன் என்றால் சேட்டின் வீட்டிற்கு கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு பதினைந்து நாட்கள் முன்பு சென்று பார்த்தேன். விலை எவ்வளவு என்று எப்போது பேசி முடித்தோம் என்றால் 26.11.2012-ல்தான் விலை பேசி முடித்தோம். சொத்தை நேரடியாக சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். சொத்தை பார்க்க சென்றபோது உடன் யார் யார் வந்தார்கள் என்றால் சேட்டு, குமார், செல்வராஜ், நான் எல்லோருமே இருந்தோம். பவர் பத்திரத்தை மட்டும் பார்த்தேனா அல்லது வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் வில்லங்கம் போட்டு பார்த்தேன். எப்போது வில்லங்கம் போட்டு பார்த்தேன் என்றாலும், அவ்வாறு வில்லங்கம் போட்டு பார்த்தற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் 15 நாட்கள் முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேன், ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. சொத்தை அளந்து பார்க்காமல் விலை பேசினேனா என்றால் சொத்தை அளந்து பார்க்கவில்லை, பத்திரத்தில் பார்த்தேன். பத்திரத்தில் உள்ள அளவுகள் சரியாக உள்ளதா என்று அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. சிட்டா, அடங்கல், பட்டா ஆகியவற்றை பார்வையிட்டேனா என்றால் அனைத்தையும் வாங்கி பார்த்தேன். எப்போது பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவற்றை பார்த்தேன் என்றாலும், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். ஆவணங்கள் அவர்கள் வசம்தான் உள்ளது. சொத்தை நான் கிரைய வாங்க இருப்பதால் பட்டா, சிட்டாவை கேட்டேனா என்றால் கேட்டேன், கிரையம் செய்யும் போது தரலாம் என்று சொன்னார்கள். சொத்தில் என்ன வீடு இருந்தது, வீட்டுவரி ரசீது, மின் கட்டண ரசீது ஆகியவை யார் பெயரில் உள்ளது

என்பதை பார்த்தேனா என்றால் ரசீதுகளை பார்க்கவில்லை. வீடு என்ன வகையான வீடு, அதன் அளவுகள், எத்தனை அறைகள் உள்ளது போன்றவற்றை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை, 22 X 22 அளவு இரண்டு அடுக்குமாடி வீடு, எத்தனை அறைகள் உள்ளது என்று தெரியாது. அந்த வீட்டில்தான் கமலா அவரது கணவரோடு குடியிருந்தார் என்றால் சரிதான். அதுபோக 5ம் பிரதிவாதியும் இருந்தார். 2ம் பிரதிவாதி கமலா இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி இறந்தபிறகு தற்போது ரத்தினம், தாமரை செல்வன் ஆகியோர் அந்த வீட்டில்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் ரத்தினம் குடியிருந்து வருகிறார், மற்றவர்கள் எங்கு குடியிருக்கிறார்கள் என்று தெரியாது. அந்த வீடு கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்பது தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பை கமலா குடியிருந்த விலாசத்திற்குதான் அனுப்பினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தத்தில் வீட்டில் யார், யார் குடியிருக்கிறார்கள், அவர்கள் எப்போது காலி செய்து தரவேண்டும் என்ற விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் 13.09.2014–ம் தேதியில் அனுப்பட்டுள்ளது. வழக்கறிஞர் அறிவிப்பில் நான் 1ம் நபரான சேட்டுவிடம் பலமுறை நேரில் சந்தித்து கேட்டதாகவும், 2 முதல் 7 நபர்களிடம் கிரையம் செய்து கொடுக்க கேட்டதாகவோ அல்லது அவர்கள் மறுத்ததாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் 1ம் நபர் பணம் பெற்றுக்கொண்டதாக மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 2 முதல் 7 நபர்களை பொறுத்து அவர்கள் என் முன்பு பணம் பெற்றுக்கொண்டதாகவோ, அவ்வாறு பெற்றுக்கொண்டு கிரையம் எழுதி தர மறுத்துவிட்டதாக வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள வாசகங்கள் எனக்கு தெரியுமா என்றால் நினைவில்லை. அந்த கிரைய ஒப்பந்தத்தில் குடும்ப உபயோக செலவிற்காக வேண்டி என்று குறிப்பிட்டு ரூபாய் ஐந்து லட்சத்திற்கு விற்பதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்படி குடும்ப உபயோக செலவிற்காக என்ற வாசகம் இல்லை என்றால் நினைவில்லை. வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த பத்திரம் யார் பெயரில் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்றால் எனது பெயரில் வாங்கப்பட்டது, எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்று நினைவில்லை. கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு எவ்வளவு பதிவு

கட்டணம் செலுத்தினேன் என்று நினைவில்லை, என் பெயரில்தான் ரசீது கொடுத்தார்கள். என் பெயரில் வாங்கியதாக சொல்லப்படும் ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் நினைவில்லை. சாட்சியாக முத்துவும், ரமேசும் கையெழுத்து செய்துள்ளார்கள். வழக்கறிஞர் அறிவிப்பில் பவர் பத்திரம் எந்த தேதியில் எழுதிக்கொடுக்கப்பட்டதற்கான தேதி குறிப்பிடவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்